ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2144/58 - 2019 ඔක්තෝබර් මස 11 වැනි සිකුරාදා - 2019.10.11
***2144/58 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை***

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளை*

***2019 ஆம் ஆண்டின் 204 ஆம் இலக்கக் கட்டளை***

எனது குறிப்பு இல. : 4-3/7/2018/எச்டபிள்யூ/07.
பி. செ. குறிப்பு இல. : ව/ප්‍රාලේ/1/3/4/2018/02.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கயந்த கருணாதிலக்க ஆகிய நான், கீழ் விபரிக்கப்பட்ட அட்டவணையின் 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தர் ஒருவருக்கு அவ் அட்டவணையின் 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் உடைமையை பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளை யிடுகின்றேன்.

கயந்த கருணாதிலக,
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர்.

காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு,
"மிஹிகத மெதுர",
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2019, ஒற்றோபர் 02.

**அட்டவணை**

1. **காணி எடுத்தல் உத்தியோகத்தர்** : பிரதேச செயலாளர், வத்தளை.

2. **காணியின் விபரம்** : மேல் மாகாணத்தில், கம்பஹா மாவட்டத்தில், வத்தளை பிரதேச செயலாளர் பிரிவில், இல. 250ஏ, குருகுலாவ தெற்கு கிராம அலுவலர் பிரிவில், குருகுலாவ கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் 2018.05.19 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட ஆரம்ப வரைபட இல. GA/WAT/2018/ 243 இல் குறிப்பிடப்பட்ட காணித்துண்டுகளின் எல்லைகள் :

01. **துண்டு 'ஏ' – மில்லகஹவத்த – விஸ்தீரணம்: 0.0048 ஹெக்டயார்**
வடக்கு: வீதி ; கிழக்கு : பாதை ; தெற்கு: வீதி; மேற்கு: எஸ். பீ. கே. சமீர உரிமை கோரும் மில்லகஹவத்த.

02. **துண்டு 'பி' – கோன்கஹவத்த – விஸ்தீரணம்: 0.0043 ஹெக்டயார்**
வடக்கு: வீதி ; கிழக்கு : கே. ஏ. எம். நாணாயக்கார உரிமை கோரும் கோன்கஹவத்த; தெற்கு: வீதி ; மேற்கு: பாதை.

10-937



இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.